# ‘இந்தியா’ கூட்டணி தமிழ்நாட்டில் கட்டுக்கோப்பாக இருக்கிறது!

## ஒன்றிய ஆட்சியாளர்களின் அச்சுறுத்தலுக்கு அஞ்சாதவர்!

# தென்னிந்திய தலைவர்களுக்கெல்லாம் தலைமை தாங்கும் ஆற்றலைப் பெற்றவர் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

### சென்னை கிழக்கு மாவட்டத்தில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னின்று நடத்திய முதல்வர் பிறந்தநாள் விழாவில் தொல்.திருமாவளவன் எம்.பி. பாராட்டு!



**சென்னை, மார்ச் 18–**

**சென்னை கிழக்கு மாவட்டம் கொளத்தூர் கிழக்குப் பகுதியில் மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான பி.கே. சேகர்பாபு முன்னின்று நடத்திய முதல்வர் பிறந்தநாள் விழாவில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி. பேசும் போது, “தென்னிந்திய தலைவர்களுக்குக்கெல்லாம் தலை மை வகிக்கும் ஆற்றல் பெற்றவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்” என்று கூறினார்.**

**இவ்விழாவில் தொல்.திருமாவளவன் எம்.பி. பேசியதாவது:–**

மக்கள் முதல்வரின் மனித நேய விழா. ‘மனித நேயம்’ என்னும் பெயரில் தொடர் நிகழ்வுகளாக பிப்ரவரி 20–ஆம் தேதியிலிருந்து 73 நிகழ்வுகளை ஒருங்கிணைத்து வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருக்கும் ஆற்றல்மிகு செயல்வீரர் – சாதனையாளர் – அண்ணன் சேகர்பாபு அவர்களை முதலில் நான் நெஞ்சார பாராட்டுகிறேன்! வாழ்த்துகிறேன்!

அவர் அழைக்கும் போதெல்லாம் நான் மகிழ்வோடு ஒப்புதல் அளிப்பதற்கு முக்கியமான காரணம், அவருடைய செயற்பாடுகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைவதற்காக நான் ஒப்புதல் அளிப்பது உண்டு. அந்த அளவிற்கு திட்டமிட்டு நேர்த்தியாக அனைத்து நிகழ்வுகளையும் ஒருங்கிணைக்கும் வல்லமை பெற்றவர். 20–ஆம் தேதி தொடங்கி 365 நாட்கள், ஒவ்வொரு நாளும் ஏழை–எளிய மக்களுக்கு உணவு வழங்குகிற நிகழ்ச்சியையும் ஒருங்கிணைத்திருக்கிறார் என்பது சிறப்பு – வியப்பு.

அவரை நான் அடிக்கடி அன்னாந்து பார்க்கிறேன். எப்படி இவ்வாறெல்லாம் திட்டமிட்டு இயங்கிக் கொண்டே இருக்கிறார்;சோர்வில்லாமல் ஓடிக் கொண்டே இருக்கிறார்; உழைத்துக் கொண்டே இருக்கிறார் என்று எண்ணி வியப்பது உண்டு. உள்ளபடியே நம்முடைய தளபதி அண்ணன் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இவரை பெற்றது பெரும் பேரு என்று தான் நான் எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன். இதை மேடைக்காக நான் பேசவில்லை. எதையும் திட்டமிட்டு செய்வதில் அவர் கைதேர்ந்தவர் என்பதை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள்.

3 மாதங்களுக்கு ஒரு நிகழ்ச்சி நடத்துவது என்பதே நமக்கு பெரும்பாடாக இருக்கிறது; வருடத்திற்கு ஒரு பொதுக்கூட்டம் அல்லது மாநாடு நடத்துவது என்பது நமக்கு மிகப்பெரிய சவாலாக இருக்கிறது. ஆனால் அண்ணன் சேகர்பாபு அவர்கள், கலைஞர் பிறந்தநாள் என்றாலும் தொடர்பு நிகழ்வுகள்; தளபதியின் பிறந்தநாள் என்றாலும் தொடர் நிகழ்வுகள்; உதயநிதியின் பிறந்தநாள் என்றாலும் தொடர் நிகழ்வுகள். இவ்வாறு 365 நாட்களும் களப்பணி – கழகப் பணி – மக்கள் பணி என்று பணியாற்றிக் கொண்டே இருக்கிறார். எங்கிருந்து இவருக்கு இந்த ஆற்றல் ஊற்றெடுத்து வருகின்றன என்றுதான் நான் எண்ணி வியக்கிறேன்.

பொது வாழ்க்கையில் பலரும் அடிக்கடி சலிப்படைவது உண்டு; சோர்வடைவது உண்டு; ஏதேனும் ஆற்றாமையை வெளிப்படுத்தும் வகையில் புலம்புவது உண்டு; என்ன செய்து, என்ன பயன்? என்பார்கள்; இவ்வளவு உழைத்தும் வீண் என்பார்கள்; எதற்காக இப்படி ஓடிக் கொண்டிருக்கிறோம்? என்று சொல்வார்கள். ஆனால், நான் அண்ணன் சேகர்பாபு அவர்களோடு பல பத்தாண்டுகளாக பழகி வருகிறேன். தி.மு.க.வில் அவர்இந்தப் பொறுப்புக்கு வந்த நாளிலிருந்து அவர்கள் நடத்துகிற அனைத்து நிகழ்வுகளிலும் நான் பங்கேற்கிறேன். அவரிடத்தில் ஒருநொடிப்பொழுதும் சோர்வை நான் கண்டதில்லை; சலிப்படைவதில்லை; களைப்பை கண்டதில்லை.

### ஆற்றல்மிகு செயல்வீரர் அமைச்சர் சேகர் பாபு!

தனிப்பட்ட முறையில் அவருடைய குடும்பத்தில் ஒரு நெருக்கடி ஏற்பட்டபோது கூட, கழகப் பணியில் இருந்த அவர் விலகவில்லை; அதிலிருந்து அவர் ஒதுங்கி நிற்கவில்லை. நான் கூட அவர் சற்று நொடித்து போய் இருப்பார்; மனம் தளர்ந்து போய் இருப்பார்; அவர் நம்மிடத்தில் அதை மனம் திறந்து கொட்டுவார் என்றுதான் எதிர்பார்த்தேன்.

ஆனால், அதை எல்லாம் ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளாமல், நடப்பது நடக்கட்டும்; எல்லாவற்றையும் எதிர்கொள்வோம் என்கிற அடிப்படையில், அப்படிப்பட்ட ஒரு நெருக்கடியான – மன அழுத்தம் இருந்த சூழ்நிலையில் கூட, ஒப்புக்கொண்ட நிகழ்ச்சிகளை புறம் தள்ளவில்லை; கழகப் பணிகளில் இருந்து அவர் விலகி நிற்கவில்லை. இது எல்லோருக்கும் வாய்க்காது.

இப்படிப்பட்ட ஒரு ஆற்றல்மிகு செயல்வீரரை தன்னுடைய தளபதியாக கொண்டிருக்கும் அண்ணன் தளபதி அவர்கள் உள்ளபடியே பெருமைப்பட வேண்டும். அவர் பெரும் பேரு பெற்றிருக்கிறார் என்றுதான் நான் எண்ணிப் பார்க்கிறேன்.

### அமைச்சர் சேகர்பாபுவை மனமாரப் பாராட்டுகிறேன்!

இந்த 73 தொடர் நிகழ்வுகளுக்காக,அவருடைய அழைப்பிதழை வடிவமைத்திருக்கும் பாங்கு; அதில் உள்ள அழகியல்; நேர்த்தி; ஒவ்வொரு நிகழ்வுக்கும் யார் தலைமை தாங்க வேண்டும்; முன்னிலை வகிக்க வேண்டும்; யார் சிறப்புரையில் பங்கேற்க வேண்டும்; புகழுரை வழங்க வேண்டும் என்பதை எல்லாம் எண்ணி திட்டமிட்டு,அனைவருடனும் தொடர்பு கொண்டு அவர்களுடைய இசைவைப் பெற்று, அவற்றை எல்லாம் இப்படி தயாரிப்பது என்பது அவ்வளவு எளிதான பணி அல்ல. நான் மனமார பாராட்டுகிறேன்! வாழ்த்துகிறேன்!

இங்கு அண்ணன் தளபதி அவர்களை எனக்கு முன்னர் பேராசிரியர் காதர் மொய்தீன் அவர்கள் இந்த முதுபெரும் வயதில் தன்னைவிட இளம் வயதாக இருந்தாலும் தளபதி அவர்களை மனம் நிறைந்து வாழ்த்தியதை கேட்டோம்; பாராட்டியதை கேட்டோம்.

அண்ணன் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் கூட நெகிழ்ந்து சொன்னார்,‘கலைஞரை விடவும் ஒரு படி மேல்’ என்று தளபதியை பாராட்டுகிறாரே என்று நான் சற்று ஆடிப் போய் விட்டேன். ஆனால் சொன்னவர், அற்புதமானவர்; புனிதமானவர்; போற்றுதலுக்குரியவர்; மிக உயர்ந்தவர்; சரியாக மதிப்பீடு செய்யக்கூடிய ஆற்றல் வாய்ந்தவர்; வெறும் முகஸ்துதிக்காக பேசக்கூடியவர் அல்ல; எனவே, அவர் சொன்னால் அது சரியாக இருக்கும் என்று அவர் வழிமொழிந்தார்.

### கொள்கைகளில் உறுதி கொண்டவர் முதல்வர்!

‘தாய் எட்டடி பாய்ந்தால், குட்டி பதினாறு அடி பாய வேண்டும்’ என்பதுதானே நம்முடைய பழமொழியும் கூட. கலைஞர் எட்டடி பாய்ந்தால், தளபதி எண்பது அடி பாய்கிறார் என்கிற அளவிற்கு அவர் ஆற்றல் வாய்ந்தவராக பரிணமித்திருக்கிறார். கலைஞருக்கே கிடைக்காத வாய்ப்பு தளபதிக்கு... என்ன வாய்ப்பு என்றால், தளபதி குழந்தைப் பருவத்தில் இருந்து, பெரியாரோடும் பழகுகிற வாய்ப்பு;பேரறிஞர் அண்ணாவோடும் பழகுகிற வாய்ப்பு; முத்தமிழறிஞர் கலைஞரோடும் பழகுகிற வாய்ப்பு;அவர்களோடு நெருங்கி இருந்து அரசியலை கற்றுக் கொள்கிற வாய்ப்பு. இது எல்லோருக்கும் வாய்க்காது. நம்முடைய பேராசிரியர் பெருந்தகை அவர்களோடும் பழகுகிற வாய்ப்பு.

இப்படிப்பட்ட பேராளுமைகயோடு நெருங்கிப் பழகி, அவர்களை உற்று நோக்கி கவனித்து, அவர்களின் நடவடிக்கைகளை எல்லாம் நேரில் கண்டு,அவற்றையெல்லாம் உள்வாங்கிய பேராற்றல் அவருக்குள் ஊற்றெடுக்கிறது. அதனால்தான் எச்.ராஜா போன்றவர்கள்,‘Stalin is more dangerous than Karunanidhi’ என்று சொல்லும் அளவுக்கு, பகைவருக்கு பெரும் அச்சுறுத்தலாக இருக்கிறார். அதுதான் மிக சரியானது.

கொள்கைப் பகைவர்களுக்கு மிகப்பெரும் அச்சுறுத்தலாக விளங்குகிறார் அண்ணன் தளபதி என்றால், அவர் சரியாக இயங்குகிறார்; தாம் ஏற்றுக் கொண்ட கொள்கைகளில் தெளிவாக இருக்கிறார்; அதைவிட, அதில் உறுதியோடு இருக்கிறார் என்பதுதான் குறிப்பிடத்தக்கதாகும்.

### கலைஞரை கண்டு அஞ்சிய சனாதனக் கும்பல்!

கலைஞரைக் கண்டு வடவர்கள் அஞ்சினார்கள்; ஏனென்றால்,பெரியாரின் கொள்கைகளை முழுமையாக ஏற்றுக்கொண்டு, அதிலிருந்து வழுவாமல் நழுவாமல் – தேர்தல் அரசியல் களத்திலும் உறுதியாக பற்றி நிற்கிற தலைவராக முத்தமிழறிஞர் கலைஞர் அரை நூற்றாண்டுக்கு மேலாக ஆற்றலோடு இயங்கினார். எனவே, அந்த சனாதனக் கும்பல் கலைஞரைக் கண்டு அஞ்சியது.

கலைஞருக்குக் பிறகு, இனி அவ்வளவுதான்; இந்த இயக்கத்தை வீழ்த்தி விட முடியும்; கலைஞரைப் போல பேசுவதற்கோ, எழுதுவதற்கோ, சாதுரியமாக அரசியல் காய்களை நகர்த்துவதற்கோ, ஆற்றல் வாய்ந்த அடுத்த தலைமை இல்லை என்று பலரும் எண்ணிக் கொண்டிருந்தார்கள். குடும்ப வாரிசிலும் இல்லை; கழக அரசியல் வாரிசிலும் இல்லை. எனவே, இனி அது எடுபடாது; மிக இலகுவாக வீழ்த்தி விட முடியும் என்று கொள்கைப் பகைவர்கள் கணித்தார்கள். ஆனால், யாரும் எதிர்பார்க்க முடியாத அளவுக்கு – கலைஞரே சாதிக்க முடியாத அளவுக்கு ஒன்றைச் சாதித்து காட்டியிருக்கிறார். அதுதான் தொடர் தேர்தல் வெற்றி. 2019,2021 மற்றும் 2024 என்று தொடர் சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்களில் வெற்றி; உள்ளாட்சி அமைப்புகளிலும் வெற்றி;

### தமிழ்நாட்டில் வலிமையான ‘இந்தியா கூட்டணி’!

அதைவிட முக்கியமாக, இந்தியாவில் எந்த மாநிலத்திலும் – யாராலும் சாதிக்க முடியாத வகையில், 10–க்கும் மேற்பட்ட கட்சிகளை ஒருங்கிணைத்து கட்டுக்கோப்பாக வைத்து வழி நடத்துகிறார்; இந்தியா கூட்டணி வேறு எங்கும் இருக்கிறதோ? இல்லையோ? தமிழ்நாட்டில் இருக்கிறது. வேறு மாநிலங்களில் அது இயங்குகிறதோ? இல்லையோ? தமிழ்நாட்டில் இயங்குகிறது. இந்தியா கூட்டணி சிதறிவிட்டது என்று எவரும் சொல்ல முடியாது. ஏனென்றால், தமிழ்நாட்டில் அது கட்டுக்கோப்பாக இயங்குகிறது. அப்படி ஒரு தலைமைத்துவத்தை வழங்குகிற ஆற்றல் வாய்ந்தவராக தளபதி அவர்கள் விளங்குவதால், பேராசிரியர் அவர்கள் சொன்னது நூற்றுக்கு நூறு சரி; அதை நாம் வழிமொழியக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இது எந்த வகையிலும் கலைஞரை குறைத்து மதிப்பிடுவது அல்ல. கலைஞருக்கு பெருமை சேர்ப்பது. ஏனென்றால், பேராசிரியர் காதர் மொய்தீன் போன்றவர்களால் பாராட்டப்படக்கூடிய ஒரு தலைமையைக் கழகத்திற்கும், தமிழ்நாட்டிற்கும் தந்து விட்டு சென்றிருக்கிறார்; அடையாளம் காட்டிவிட்டு சென்றிருக்கிறார் முத்தமிழர் கலைஞர் என்பது தான், அதில் கலைஞருக்கு உள்ள சிறப்பு.

### ‘தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து முந்தி இருப்பச் செயல்’

தந்தை முத்துவேல் கருணாநிதி அவர்கள், தன்னுடைய மகன் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினுக்கு செய்திருக்கும் நன்றி, தென்னிந்திய தலைவர்கள் எல்லாம் கூடுகிற அவையில் முந்தியிருக்கிறச் செயல். 22–ஆம் தேதி நடைபெறப்போகிறது. பல மாநில முதலமைச்சர்கள் எல்லாம் கலந்து கொள்ளப் போகிறார்கள். அதை தலைமை தாங்கி நடத்துகிற அவையில், இன்றைக்கு நம்முடைய தளபதி ஸ்டாலின் அவர்கள் இருக்கிறார். ஒரு முதலமைச்சராக இருக்கிறார் என்பதனால் அவர்கள் வருகிறார்கள் என்று இல்லை. இவர் எடுத்திருக்கும் அரசியல் சரியானது என்பதால் வருகிறார்கள்; அவர் பேசுகிற அரசியல் பொருத்தமானது என்பதால் வருகிறார்கள்; அவர் முன்னெடுத்திருக்கும் இந்த முயற்சி, தென் இந்திய மாநிலங்களின் நலன்களைச் சார்ந்தது என்பதால் வருகிறார்கள்; அதன் வழி, அவர் தென்னிந்திய முதலமைச்சர்களுக்கு எல்லாம் – தலைவர்களுக்கெல்லாம் தலைமை தாங்கி வழி காட்டும் ஆற்றலை பெற்றிருக்கிறார். எனவே, அண்ணன் தளபதி அவர்கள் போற்றுதலுக்குரியவர்; பாராட்டுதலுக்குரியவர். அதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இல்லை.

இந்திய ஒன்றிய ஆட்சியாளர்கள் அச்சுறுத்திப் பார்த்தார்கள். கல்வி நிதி தர முடியாது என்று அவர்கள் எடக்கு முடக்கு செய்கிற சூழ்நிலையில், தர வேண்டாம், நானே ஒதுக்கி சமாளித்துக் கொள்கிறேன் என்று, இன்றைக்கு கல்வித்துறைக்குதான் அதிகமான நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார். ஒவ்வொரு துறைக்கும் ஒதுக்கி இருக்கிற நிதி பங்கீட்டைப் பாதிக்கிற போது, முதலிடத்தில் இருப்பது கல்விதான். கல்விக்கு அவ்வளவு நிதியை ஒதுக்கீடு செய்து, உங்களுடைய உதவி இல்லாமலேயே எங்களால் ஒன்றிய அரசின் பாடத்திட்டத்தை நடத்துகிற கல்விக்கூடங்களிலும், கல்வியை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல முடியும் என்பதை இன்றைக்கு ஒரு சவாலாக எடுத்துக் கொண்டிருக்கிறார். நீ பத்தாயிரம் கோடி தருவதாக இருந்தாலும் பணிய மாட்டோம் என்று எச்சரிக்கை விடுக்கிறார். இந்தியாவில் எந்த மாநில முதலமைச்சருக்கும் இல்லாத துணிச்சல் – முத்தமிழறிஞர் கலைஞரின் துணிச்சல் – பேரறிஞர் அண்ணாவின் முதிர்ச்சி – பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாருக்கு இருந்த கொள்கைத் தெளிவு – இவையெல்லாம் ஒருங்கிணைந்து இருப்பதால்தான், இந்திய வல்லரசை எதிர்த்து ஒரு மாநில முதலமைச்சர் பேச முடிகிறது.

30–க்கும் மேற்பட்ட மாநிலங்கள்; பத்துக்கு மேற்பட்ட யூனியன் பிரதேசங்கள்;140 கோடி மக்கள் தொகை கொண்ட ஒரு தேசம்; அந்தத் தேசத்தை ஆளுகிற ஆட்சியாளர்களை எதிர்த்து, ஒரு மாநில முதலமைச்சர் சவால் விட முடிகிறது என்று சொன்னால், அந்தத் துணிச்சல், அசட்டு துணிச்சல் அல்ல; அறிவார்ந்த துணிச்சல்; கொள்கைச் சார்ந்த துணிச்சல்; மக்களின் பெரும் ஆதரவை பெற்ற தலைவர் என்கிற துணிச்சல்; அந்த துணிச்சலை நாம் எப்படி பாராட்டாமல் இருக்க முடியும். வியந்து பாராட்டுகிறோம்! அண்ணன் அவர்களோடு இணைந்து பயணிப்பதில் பெருமைப்படுகிறோம்! அவரோடு களத்தில் கை குழந்தை நிற்பதில் களிப்படைகிறோம்!

### இருமொழிக் கொள்கையில் உறுதி!

அண்ணன் தளபதி அவர்கள், இந்தித் திணிப்பைப் பற்றி பேசுகிறபோது – இரு மொழிக் கொள்கையை மட்டுமே நாங்கள் ஏற்போம் என்று சொல்லுகிறபோது, அதில் அவர் காட்டுகிற உறுதி, பெரியார் இன்னும் இறக்கவில்லை என்பதை நமக்கு உணர்த்துகிறது; பேரறிஞர் அண்ணா இன்னும் நம்மோடு இருக்கிறார் என்பதை உணர்த்துகிறது;முத்தமிழறிஞர் கலைஞர்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தை வழி நடத்துகிறார் – தமிழ்நாட்டை வழி நடத்துகிறார் என்பதை உணர்த்துகிறது.

மும்மொழி எதற்கு? ஏன், எங்களுக்கு மட்டும் – எங்கள் பிள்ளைகளுக்கு மட்டும் அந்த சுமை? வட இந்தியா மாநிலங்களில், குறிப்பாக இந்தியை தாய்மொழியாக கொண்டவர்களின் மாநிலங்களில் ஒரு மொழி கொள்கைதானே நடைமுறையில் இருக்கிறது. ஆங்கிலம் கூட அவர்கள் சொல்லித் தரவில்லை. அதனால்தான் எந்த அமைச்சருக்கும் ஆங்கிலமே தெரியவில்லை. நாம் ஆங்கிலத்தில் பேசினால்,அமைச்சர்கள்யாரும் ஆங்கிலத்தில் பதில் சொல்ல மாட்டார்கள். அருகில் இருக்கும் அதிகாரி அவர்களுக்கு இந்தியில் சொன்ன பிறகுதான், நமக்கு இந்தியிலே சொல்லுவார்கள். நமக்கும் புரியாது. ஒரு சில அமைச்சர்கள் மட்டும்தான் ஆங்கிலத்தில் பேசக் கூடியவர்களாக இருக்கிறார்கள். அதை நான் குறைத்துச் சொல்லவில்லை;இழித்துப் பேசவில்லை. அவர்கள் ஒரு மொழியை நம்புகிறார்கள்;இந்தியை மட்டுமே படிக்கிறார்கள்; அதை வைத்தே ஆட்சி அதிகார பீடத்திலும் இருக்கிறார்கள்; ஆதிக்கம் செலுத்துகிறார்கள்; ஆனால், நாம் மூன்று மொழிகளை கற்க வேண்டும் என்று சொல்வது, எந்த அடிப்படை? நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

சிலபேர், ஏதோ இந்தி ஒரு தேவாமிர்த மொழி என்பதைப் போல, அதை ஏழை – எளிய பிள்ளைகளுக்கு படிக்க வாய்ப்பு அளிப்பது மிக முக்கியமானது என்று வியாக்கியானம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

இரண்டு மொழிக் கொள்கையை வைத்துதான் தமிழ்நாடு இன்றைக்கு இந்தியாவிலேயே முதலிடத்தில் இருக்கிறது. கல்வி என்றாலும், வட இந்தியர்கள் தமிழ்நாட்டிற்கு வருகிறார்கள்; மருத்துவம் என்றாலும், வட இந்தியர்கள் தமிழ்நாட்டிற்கு வருகிறார்கள்; இன்றைக்கு வேலைவாய்ப்பைத்தேடியும், வட இந்தியர்கள் தமிழ்நாட்டிற்கு வந்து கொண்டிருக்கிறார்கள்; இந்த அளவிற்கு தமிழ்நாடு வளம் நிறைந்த மாநிலமாக வளர்ச்சி அடைந்திருக்கிறது; தனிநபர் வருமானத்தில் இந்தியாவிலேயே தமிழ்நாடு சிறப்பிடத்தை பெற்றிருக்கிறது; அதே போல, ஜி.டி.பி. என்கிற பொருளாதார உற்பத்தியில் மிக உயர்ந்த இடத்தில் இருக்கிறது. மூன்று மொழிக் கொள்கையை வைத்து அல்ல, இரு மொழிக் கொள்கையை வைத்துத்தான் இந்த வளர்ச்சி எல்லாம் அடைந்திருக்கிறோம்.

### இருமொழிக் கொள்கையினால் தமிழ்நாடு பின்தங்கி விட்டதா?

இரு மொழிக் கொள்கை இருப்பதனால், தமிழ்நாடு எந்த வகையில் பின்தங்கிவிட்டது? கல்வியில் பின்தங்கிவிட்டதா? தொழில் வளத்தில் பின்தங்கிவிட்டதா? வர்த்தகம், வணிகத்தில் பின்தங்கிவிட்டதா? மருத்துவத்தில் பின்தங்கிவிட்டதா? எந்த அடிப்படையில், மூன்றாவது மொழி படிக்காததால் – இந்தியை படிக்காததால் தமிழ்நாடு பின்தங்கி விட்டது என்று சொல்ல முடியுமா? ஆதாரம் காட்ட முடியுமா?

### இந்தியைப் படித்துதான் சுந்தர் பிச்சை உயர்ந்த இடத்திற்கு வந்தாரா?

அவர்கள் ஏன் இந்தியைப் படிக்கச் சொல்கிறார்கள் என்பதை நாம் ஆழசிந்திக்க வேண்டும். அவர்களின் நோக்கம் இந்தியைப் படித்தால் வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பது அல்ல. இந்தியைப் படித்தால் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றால், நாம் தடுத்தாலும் தமிழர்கள் படிப்பார்கள். வேலை வாய்ப்பு கிடைக்கிற மொழியை எவன் ஒருவன் படிக்காமல் இருப்பான்...இந்தியைப் படித்தால் வேலை வாய்ப்பு கிடைக்கும் என்றால்,இந்தியை தமிழர்கள் தேடிச் சென்று படிப்பார்கள். இந்திக்கும் – வேலை வாய்ப்புக்கும் சம்பந்தமில்லை. இந்தியைப் படித்தால் தான் வட இந்தியர்களோடு உறவாட முடியும் என்று சில பேர் விளக்கம் சொல்கிறார்கள். வட இந்தியர்களோடு உறவாடாமல் நாம் வாழ முடியாதா? வளர முடியாதா? இந்தியைப் படித்துதான் சுந்தர் பிச்சை இவ்வளவு பெரிய உயர்ந்த இடத்திற்கு சென்றாரா?

அவர்களின் நோக்கம் அது அல்ல. இந்தியைப் படிப்பதால் மொழித் திறன் வளரும்; அறிவு வளரும்; ஆற்றல் பெருகும்; வேலை வாய்ப்பு இலகுவாக கிடைக்கும்; இந்தியாவில் எங்கும் சென்று பிழைத்துக் கொள்ளலாம் என்பதெல்லாம் சொத்தை வாதம். அதுவல்ல அவர்களின் நோக்கம்.

அவர்களின் நோக்கம் என்னவென்றால், இந்தியா முழுவதும் அனைத்து மாநிலங்களிலும் வாழும் பிற மொழி பேசும் மக்கள் அனைவரையும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு இந்தியை பேசக் கூடியவர்களாக மாற்ற வேண்டும்; இந்தியா முழுவதும் இந்தியைத் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும்; இந்தியாவின் ஒற்றை மொழியாக இந்தியை உருவாக்க வேண்டும். அதுதான் அவர்களின் நோக்கம். அதனால் தான் இந்தி அல்லாத பிற மொழி பேசும் மாநிலங்களில்இந்தியைத் திணிக்கிறார்கள். ‘ஒரே தேசம் – ஒரே மதம்’ என்பதைப் போல; ‘ஒரே தேசம் – ஒரே கலாச்சாரம்’ என்பதைப் போல;‘ஒரே தேசம் – ஒரே மொழி’என்பதுதான் அவர்களின் இலக்கு.

### நாக்பூர் அரசியல்வாதிகளின் லட்சியம் என்ன?

அவர்களின் இலக்கு என்றால், அவர்கள் என்றால் யார்? மோடி, அமித்ஷா மட்டுமல்ல; தமிழ்நாட்டில் உளறிக் கொண்டிருக்கிற பி.ஜே.பி. தலைவர்கள் அல்ல; அவர்கள் என்றால், அண்ணன் சொன்னதைப்போல, நாக்பூர் ஆர்.எஸ்.எஸ்.–காரர்கள் – நாக்பூர் அரசியல்வாதிகள். அவர்களின் இறுதி லட்சியம் என்ன? இறுதி இலக்கு என்ன? இந்தத் தேசத்தை அவர்கள் விரும்புகிற தேசமாக மாற்ற வேண்டும். அவர்கள் விரும்புகிற தேசம் எது?காந்தி விரும்புகிற தேசமா? இல்லை; பண்டித ஜவர்கலால் நேரு அவர்கள் விரும்பிய தேசமா? இல்லை; தந்தை பெரியார் விரும்பிய தேசமா? இல்லை; புரட்சியாளர் அம்பேத்கர் கனவு கண்ட தேசியமா? இல்லை. இவர்களெல்லாம் விரும்பிய தேசத்திற்கு எதிராக – மாறாக, அவர்கள் ஒரு தேசத்தை விரும்புகிறார்கள். அதுதான், சனாதன இந்தியா. இந்து ராஷ்ட்ரா என்று சொல்லுகிற சனாதன இந்தியா என்பதுதான் அவர்களின் தேசம்.

அந்த இந்தியாவில்,மீண்டும்பிறப்பின் அடிப்படையில் உயர்வு – தாழ்வு நிலைப்படுத்தப்படும்; பெண்கள், ஆண்களுக்கு கீழே கட்டுப்பட்டவர்களாகத்தான் கிடந்து உழல வேண்டும்; அதுதான் சனாதன இந்தியா. வர்ணாசிரம தர்மம் இங்கே கோலோச்ச வேண்டும்; பார்ப்பனர்களே எல்லோரையும் விட உயர்ந்தவர்கள் என்பது நிலைபெற வேண்டும்; அவர்களுக்கு கீழான அடிமைகளாக மற்றவர்கள் இங்கே உழைக்க வேண்டும்; சூத்திரர்கள், சூத்திரர்களாக இருக்க வேண்டும்; நீதிபதிகளாகக் கூடாது; ஆட்சி, அதிகாரத்திற்கு வரக்கூடாது; அப்படிப்பட்ட அந்த பழைய இந்தியாவை – சனாதன இந்தியாவை – சாதிய இந்தியாவை, இங்கே நிலைநாட்டுவது என்பதுதான் ஆர்.எஸ்.எஸ்.–இன் நோக்கம்.

இன்றைக்கு அரசமைப்புச் சட்டத்தின்படி உருவாக்கிக் கொண்டிருக்கும் இந்தியா வலுப்பெற்றால் – சமூக நீதி இங்கே வலுப்பெற்றால் – சூத்திரர்கள், பஞ்சவர்கள் என்று அடிமைப்படுத்தப்பட்டுக் கிடந்து உழலுகிற மக்கள் அதிகார வலிமை பெற்றால் – அவர்களின் சமூகம் என்று சொல்லுகிற, அந்த பார்ப்பனச் சமூகம் அல்லது முன்னேறிய சமூகம் நம்மைப் போல் உடல் உழைப்புக்கு தள்ளப்படும் நிலை ஏற்படும். அவர்களும் வண்டி இழுத்தால் தான் உண்ண முடியும்; கொத்து வேலை செய்தால் தான் சாப்பிட முடியும்; கழனி வேலை செய்தால் தான் சாப்பாட்டு தட்டில் கை வைக்க முடியும் என்கிற ஒரு சமத்துவ நிலை. எல்லோரும் உழைக்க வேண்டும் என்பது ஒரு சமத்துவ நிலை. அந்த நிலை உருவாகும். காலம் காலமாய், தலைமுறை தலைமுறையாய் அவ்வாறு உழைக்காமலேயே, பாதுகாப்போடு தலைமுறை தலைமுறையாய் வாழ முடியும் என்கிற அளவுக்கான ஒரு சமூகக் கட்டமைப்பை உருவாக்கியதுதான் சனாதன தர்மம் – வர்ணாசிரம தர்மம்.

### தந்தை பெரியார் தமிழுக்கு எதிரானவரா?

எனவேதான்,1938–இல் இந்திய எதிர்ப்புப் போராட்டத்தை தலைமை தாங்கி வழி நடத்தினார். இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடத்திய பெரியார், எப்படி தமிழர்களுக்கு எதிரானவராக இருப்பார். சில பேர் இங்கே உளறிக் கொட்டிக் கொண்டிருக்கிறார்களே... தமிழர்களுக்கும் – தமிழ்த் தேசியத்திற்கும் எதிரானவர் பெரியார் என்று.1938–இல் நாமெல்லாம் கருவாகக் கூட இல்லை. இந்த உணர்வே நம்முடைய முன்னோருக்கு – பெற்றோருக்கு கூட இருந்திருக்காது. அந்தக் காலகட்டத்தில் அவர்களின் சூழ்ச்சி அறிந்து, அப்போதே இந்த மண்ணில் இந்தியைத் திணிக்கக் கூடாது என்று இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராடி சிறைச்சென்றவர், தந்தை பெரியார். அவர் தமிழுக்கு எதிரானவரா? தமிழருக்கு எதிரானவரா? தமிழ்நாட்டுக்கு எதிரானவரா? எண்ணிப் பார்க்க வேண்டும். திராவிடம் என்கிற இந்த அரசியல் இல்லை என்றால், தமிழ் என்ற உணர்வு காப்பாற்றப்பட்டிருக்குமா? தமிழன் என்ற உணர்வு பாதுகாக்கப்பட்டிருக்குமா?

### எப்படி இவர்களால் கலைஞரை விமர்சிக்க முடிகிறது!

கலைஞர், தமிழர் இல்லை என்கிறார்களே சிலர். அந்தக் கலைஞர்தானே திருவள்ளுவனுக்கு வானுயர சிலையை எழுப்பி இருக்கிறார். வள்ளுவனுக்கு வானுயர் சிலையை எழுப்பியது, தமிழ்த் தேசியத்திற்கு எதிரானதா? வள்ளுவனுக்கு கோட்டம் எழுப்பியது, தமிழ்த் தேசியத்திற்கு எதிரானதா? குறளோவியம் தீட்டியது, தமிழ்த் தேசியத்திற்கு எதிரானதா? திருக்குறளைஒவ்வொரு பேருந்திலும் எழுதி வைத்து, ஒவ்வொரு நாளும் அந்தத் திருக்குறளை ஒருவனாவது பார்த்து படிக்கட்டும். பள்ளி மாணவன் – கல்லூரி மாணவன் படித்து, அதன் பொருளை புரிந்து கொள்ளட்டும் என்று திருக்குறளை பரப்பினாரே, அது தமிழுக்கும் – தமிழனுக்கும் எதிரானதா? தமிழ்த் தேசியத்திற்கு எதிரானதா? எப்படி இவர்களால் கலைஞரை விமர்சிக்க முடிகிறது.

1965–இல் திராவிட முன்னேற்றக் கழகம் முன்னின்று, இந்த உணர்வை கட்டி காப்பாற்றியதினால் தான், மாணவர்களிடையே இந்தித்திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் வெடித்தது; அதில், தமிழ் அறிஞர்களின் பங்கும் உண்டு; பல்வேறு இயக்கங்களைச் சார்ந்த முன்னோடிகளின் பங்களிப்பும் உண்டு; ஆனால், அரசியல் ரீதியான தாக்கத்தை

தொடர்ச்சி 4–ஆம் பக்கம்